O.S.107 -2024

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.107/2024

வாதி தரப்பு 1வது சாட்சி சந்திரசேகரன் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சந்திரசேகரன் | வயது | : | 63/2026 |
| தகப்பனார் பெயர் | : | ராமையா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | ரியல் எஸ்டேட் |

நாள்-29.04.2026

வா.சா.1

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1) நான் 1ம்**பிரதிவாதி மணிகண்டனிடம் நேரடியாகவும, உறவினர் மூலம் பணம் கேட்டும் தரவில்லை என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2) நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூத்தில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது.

3) பிரதிவாதிகள் இருவரும் எனக்கு நேரடியான சொந்தம். மணிகண்டனின் தாயார் கற்பகம் எனது அக்கா முறை. 1ம் பிரதிவாதியை சிறிய குழந்தையிலிருந்தே எனக்கு தெரியும்.

4) நானும், 1ம் பிரதிவாதியும் எந்த கூட்டு தொழிலும் செய்யவில்லை. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

5) 1ம் பிரதிவாதி எனக்கு ரூ.1 கோடி பணம் தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

6) நான் டிகிரி படித்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.